1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இத்திட்டம் பற்றிய தள அளவிலான, விரிவான ஆய்வுகள் ' இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே ' தானிருக்கின்றன. அது முடிந்ததற்குப் பிறகுதான் அதன்மீது முடிவு எடுக்கப்படும். ஆனால், பொதுவாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஓரளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொட்டகுடி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 807—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடித் தொகுதியில் கொட்டகுடி ஆற்றில் கொம்புதூக்கி அருகில் அணை கட்ட அரசினால் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) வைகை சுருளியார் படுகையின் நீரியல் ஆய்வின்படி கொட்டகுடியாற்றில் அணைகட்டி போடி பகுதி நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப் போதுமான உபரிநீர் இல்லாததால், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு இல்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப் பொருள்கள்.

*வினா எண். 808 :—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப்பொருள்கள் யாது கிடைக்கின்றன?

(ஆ) இது குறித்து அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—(அ) மற்றும் (ஆ) : வடஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் அண்மைக் காலத்தில் புதிய கனிப்பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி ஒரு செய்தி கிடைத்த காரணத்தாலேதான் இந்த வினாவே எழுப்பப்பட்டது. அண்மையிலே

அது மாதிரி ஏதாவது ஆராய்ச்சி நடைபெற்றதா? அப்படி ஆராய்ச்சி நடைபெற்றதனுடைய கண்டுபிடிப்புகள் ஏதாவது வந்துள்ளதா? இல்லையென்றால், இனிமேலாவது, கண்டுபிடிக்க, அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய புவியியல் பிரிவு 1972–லேயும், 1975-76-லேயும் அந்த பகுதியிலே ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த அடிப்படையிலேதான் இரும்புத் தாதும் சல்ஃபைட் தாதும் அங்கே இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால், அவற்றின் தரம் மிகக் குறைந்த அளவிலே இருக்கிற காரணத்தினாலேயும்—சல்ஃபைட் அமைப்பு முறையிலே மேல் மட்டத்திலேயிருக்கிறது—வியாபார ரீதியாக அவற்றை 'மைன்' பண்ணுகிற பொழுது லாபகரமாக இருக்காது என்ற காரணத்தாலேயும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி.

* வினா எண். 809—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 1980–81ல் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம்?

(இ) 1979–80 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி எவ்வளவு?

(ஈ) அதற்கு முந்தின ஆண்டை விட 1979–80ம் ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ), (ஆ) மற்றும் (இ) : 1979-80-ல் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 3.67 இலட்சம் டன்கள். 1980–81-ல் சர்க்கரை உற்பத்தி 3.92 லட்சம் டன்கள் கூடுதலாக 25,000 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும்.

(ஈ) 1978–79 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியைக் காட்டிலும் 1979–80 ஆண்டு உற்பத்தி 1.25 இலட்சம் டன்கள் குறைவு.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த 1979-ம் ஆண்டில் குறைந்ததற்கு என்ன காரணம்? விவசாயிகளுக்குக் கரும்பு விலையை நியாயமாக அந்த சமயத்தில் உயர்த்திக் கொடுக்காததனால் ஏற்பட்டதா? அல்லது தங்களுடைய உற்பத்தி கெப்பாசிடியை முழுவதும் உபயோகப்படுத்தாததனால் அந்தக் குறைவு ஏற்பட்டதா?